**செ.வெ.எண்-47** **நாள்-23.01.2020**

# அரியலூர் மாவட்டத்தில் 201 ஊராட்சிகளிலும் கிராமசபைக் கூட்டம், குடியரசு தினமான 26.01.2020 அன்று நடைபெறவுள்ளது – மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 201 ஊராட்சிகளிலும் கிராமசபைக் கூட்டம், குடியரசு தினமான **26.01.2020** அன்று நடைபெறவுள்ளது

இக்கூட்டத்தில், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது செலவினம் குறித்தும், 2019-2020 ஆம் நிதியாண்டு வளர்ச்சி பணிகளுக்கான திட்ட அறிக்கை ஒப்புதல் குறித்தும், குடிநீரை சிக்கனமாகவும், முறையாகவும் பயன்படுத்துதல் குறித்தும், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்ட பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்தும், கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து தெரிவித்து ஒப்புதல் பெறுவது குறித்தும், பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி மற்றும் உபயோகத்தினை தடை செய்வது குறித்தும், மக்கள் திட்டமிடல் இயக்கம் வெற்றிகரமாக செயல்படுத்திட தீர்மானிப்பது குறித்தும், முழு சுகாதாரம், முன்னோடி தமிழகம் திட்ட செயல்பாடுகள் குறித்தும், தூய்மையே சேவை, திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் குறித்தும், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் குறித்தும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணிகள் குறித்தும், மகளிர் திட்டம்- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க பணிகள் குறித்தும், குழந்தை கடத்தல், குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் போன்ற பிரச்சனைகள் களைவதற்காக தீர்மானம் நிறைவேற்றுதல் குறித்தும், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் 2020-21 குறித்தும், தேசிய வாக்காளர் தின உறுதிமொழி 2020 ஏற்றுக்கொள்ளுதல் குறித்தும், பொதுவிநியோகத்திட்டம் மற்றும் நியாய விலைக்கடைகளின் ஆவணங்களை சமூகத் தணிக்கைக்கு உட்படுத்தி கிராம சபையில் ஒப்புதல் பெறுவது குறித்தும் விவாதிக்கப்படும்.

பொதுமக்கள், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி ஊராட்சி செயலர்களால் கொண்டுவரப்படும் இதர பொருட்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட உள்ளதால், அந்தந்த பகுதிகளில் உள்ள பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் திரளாக கிராமசபைக் கூட்டத்தில் கலந்துக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**